விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 7 வெள்ளி 23.07.2021 மலர் - 2, இதழ் - 108

# வெளிவந்த பெகாசஸ் உண்மை



விஜயபாரதம்

பாரதத்தின் நலன்களுக்கு எதிராக செயல்படுவதை வழக்கமாகக்கொண்ட அம்னெஸ்டி இன்டர்நேஷனல், சமீபத்தில் இஸ்ரேலிய நிறுவனமான என்.எஸ்.ஓ'வின் பெகாசஸ் மென்பொருள்வாயிலாக உலகத்தலைவர்களின் அலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுவதாக அறிக்கை வெளியிட்டது. அதில் ஒட்டுகேட்கப்பட்டதாகக் கூறி 50 ஆயிரம் அலைபேசி எண்களின் பட்டியலை வெளியிட்டது. இதனை என்.எஸ்.ஓ மறுத்தது. பாரத அரசும் இதனை திட்டவட்டமாக மறுத்தது. ஆனாலும், நமது நாடாளுமன்றத்திலும் எதிர்கட்சிகள் இதனை பெரிய விவாதப் பொருள் ஆக்கின. ஊடகங்களும் சமூக ஆர்வலர்களும் இதனை ஊதி பெரிதாக்கினர்.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் போதிய ஆதாரங்கள் இல்லாததால் திடீரென பின்வாங்கியுள்ளது அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பு. தாங்கள் வெளியிட்ட பட்டியல் பெகாசஸ் உளவு செயலி வாயிலாக உளவு பார்க்கப்பட்ட எண்கள் என நாங்கள் ஒருபோதும் கூறவில்லை, ஊடகங்கள்தான் அவ்வாறு வெளியிட்டன என கூறி, இந்த பரபரப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது அம்னெஸ்டி.

# தாமிரபரணி தாய்க்கு சீர்செய்ய வாரீர்


விஜயபாரதம்

பாரத தேசம் முழுவதும் ஹிந்துக்கள் நதிகளை தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். அந்த வகையில் தாமிரபரணி தாய்க்கு உகந்த நாளான ஆடிப்பெருக்கு 18 (ஆகஸ்ட் 3) அன்று நடைபெற உள்ளது. அன்று தாமிரபரணி நதிக்கு அபிஷேகம் செய்து, தாய்மார்கள் மங்கள சீர் செய்யும் நிகழ்வு நடைபெற உள்ளது. இதில் விஷ்வ ஹிந்து பரிஷத் மாநில அமைப்பாளர், துறவியர் பெருமக்கள், ஆன்மீகப் பெரியவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். ஆடிப்பெருக்கு சீர்செய்ய விரும்பும் தாய்மார்கள், மாத்ரு சக்தி அமைப்பாளரை 8344586656 என்ற எண்ணிலும் முன்பதிவுக்கு 8610480723 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என விஷ்வ ஹிந்து பரிஷத் தெரிவித்துள்ளது. சிறப்பு மிகுந்த இந்த ஆன்மீக விழா, சமூக இடைவெளி, முகக்கவசம் உள்ளிட்ட கொரோனா விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தேவையற்ற பதற்றம்


விஜயபாரதம்

வேலூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயத்திற்கு வந்த பக்தர்களை உள்ளே அனுமதிக்க மறுத்து தடுத்தது தமிழக காவல்துறை. அது குறித்து கேட்டபோது, பக்ரீத் என்பதால் அனுமதி இல்லை என கூறினர். முஸ்லிம்கள் கொண்டாடும் பக்ரீத்துக்கும் ஹிந்துக்கள் வணங்கும் ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கும் சம்பந்தமே இல்லாமல் முடிச்சுப்போட்டு தேவையற்ற பதற்றத்தை தமிழக காவல்துறை உருவாக்கியது. இதனை அறிந்த வேலூர் இந்து முன்னணி பொறுப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகளிடம் பக்தர்களை கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை என்றால் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தனர். அதன் பிறகே பக்தர்கள் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். கடந்த சில வருடங்களாகவே டிசம்பர் 6, அனைத்து முஸ்லிம் விழாக்களின் போதும் ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அனுமதி மறுத்து தேவையற்ற பதற்றத்தை மாநில அரசே உருவாக்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதிரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?


விஜயபாரதம்

சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் உள்ள சர்ச்சில், கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் இணைந்து சட்டவிரோத ஜெபக்கூட்டத்தை அனுமதிக்கக் கோரிய ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய பாதிரி ஒருவர், பாரத மாதாவை இழிவாக பேசியுள்ளார். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமீத்ஷாவை சபித்துள்ளார். பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் காந்தியை ஒருமையில் தரக்குறைவாக பேசியதுடன் சமூகப் பதற்றம், மத மோதலை உருவாக்கும் விதத்தில் கருத்துகளைத் தெரிவித்துள்ளார். மேலும், பொது மேடையில் கீழ்தரமான, தவறான வார்த்தை பிரயோகங்களும் பல இடங்களில் செய்துள்ளார். குமரி மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் மெஜாரிட்டியாக உள்ளதை ஒப்புக்கொண்ட அவர், தி.மு.க வென்றது நாங்கள் போட்ட பிச்சை என கூறியதுடன் ஹிந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவையும் தரக்குறைவாக விமர்சித்துள்ளார். எனவே, அவர் மீது மத்திய மாநில அரசுகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். குமரி மாவட்டத்தில் கணக்கெடுப்பு நடத்தி மைனாரிட்டி அந்தஸ்து யாருக்கு அளிப்பது என்பதை பரிசீலிக்க வேண்டும். சர்ச் நிர்வாகமும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பதவி நீக்கம் செய்ய வேண்டும் என குமரி மாவட்ட மக்களும் நெட்டிசன்களும் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

# பெருகும் ராணுவ பலம்

எதிரி நாட்டு பீரங்கிகளை தாக்கி அழிக்கும் வகையிலான ஏவுகணைகளை, உள்நாட்டிலேயே தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டது ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டி.ஆர்.டி.ஓ. சமீபத்தில் அது கண்டுபிடித்த, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகு ரக பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை ஒடிசாவில் உள்ள பாலாசோர் ஒருங்கிணைந்த ஆய்வு மையத்தில் இருந்து வெற்றிகரமாக செலுத்தி சோதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்த ஏவுகணைகள் ராணுவத்தில் இணைக்கப்பட்டன. இதேபோல, நிலத்தில் இருந்து விண்ணில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் புதிய 3ம் தலைமுறை ஆகாஷ் என்.ஜி ரக ஏவுகணையும் வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது. ஒலியைவிட 2.5 மடங்கு வேகத்தில் பாய்ந்து சென்று சுமார் 60 கி.மீ தூரத்தில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்டது இந்த ஏவுகணை. இந்த ஏவுகணையில் பல்வேறு மேம்பட்ட தொழில்நுட்பக் கருவிகள், அகச்சிவப்பு இமேஜிங் கருவிகள் உள்ளன என்பதுடன் இதனை கையில் எடுத்து சென்று பயன்படுத்த முடியும் என்பது இதன் சிறப்பு.

விஜயபாரதம்



# ஈ.வே.ரா. திருமா படங்கள் நீக்கம்

சமீபத்தில் திருவாரூர் குரு தக்ஷிணாமூர்த்தி மடத்தின் சுவற்றில், திருமாவளவன். ஈ.வே.ராமசாமி நாயக்கரின் படங்களை வரைந்து கோயிலின் புனிதத்தை விடுதலை சிறுத்தை அமைப்பினர் சிறுமைப்படுத்தினர். இது குறித்து அறிந்த இந்து முன்னணி உள்ளிட்ட ஹிந்து அமைப்புகள் கொடுத்த புகாரின் அடிப்படையில், உடனடியாக சுவர் விளம்பரம் அழிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட விடுதலை சிறுத்தை கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விஜயபாரதம்





விஜயபாரதம்

# வழிகாட்டும் கர்நாடகா

எவ்வித காரணமும் இன்றி சமூகத்தால் ஒதுக்கப்படுபவர்கள் திருநங்கையர். இதனால், அவர்கள் பிழைப்புக்காக, வேறு வழியே இல்லாமல் மட்டுமே பிச்சை எடுப்பது உள்ளிட்ட சில செயல்களில் ஈடுபடுகின்றனர். சமுதாயத்தில் உள்ள திருநங்கையரில் நல்ல பெயர், புகழ் அந்தஸ்தோடு இருப்பவர்கள் சொற்பமே. அவர்களுக்கும் சமுதாயத்தில் உழைத்து முன்னேற, கௌரவமாக வாழ சமமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். அவ்வகையில், பாரதத்தில் உள்ள மாநிலங்களில் முதன்முறையாக அவர்களுக்கு ஒரு பெரிய நிவாரணம் அளித்துள்ளது பா.ஜ.க தலைமையிலான கர்நாடக அரசு. சமீபத்தில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் அம்மாநில அரசு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. அதில், திருநங்கைகளுக்கு எதிராக எந்தவொரு பாகுபாடும் இருக்கக்கூடாது என்பதால் இனி அனைத்து அரசு சேவைகளிலும் திருநங்கைகளுக்காக ஒரு சதவீத இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, 1977ம் ஆண்டு கர்நாடக சிவில் சர்வீஸ் விதிகள் திருத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம், கர்நாடக அரசின் நடவடிக்கையை வரவேற்று பாராட்டியுள்ளது.

# சுதேசி ஜாக்ரன் மஞ்ச் பரிந்துரை

விஜயபாரதம்

மத்திய அரசால் சமீபத்தில் முன்மொழியப்பட்ட இணையவழி வர்த்தகமான இகாமர்ஸ் நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 2020ஐ வரவேற்றுள்ளது சுதேசி ஜாக்ரன் மஞ்ச் அமைப்பு. மேலும், இது குறித்து மத்திய அரசுக்கு சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது. அதன்படி, ‘முன்மொழியப்பட்ட புதிய விதிகள் இகாமர்ஸ் நிறுவனங்களிடமிருந்து நுகர்வோரை பாதுகாப்பதில் ஒரு முக்கியமான மைல்கல். ஆனால், இகாமர்ஸ் நிறுவனங்கள் தங்களை வெறும் தொழில்நுட்ப தளங்களாக மட்டுமே கூறிக்கொள்கின்றன. அது தடுக்கப்பட வேண்டும். அமேசான், வால் மார்ட், பிளிப் கார்ட் உள்ளிட்ட பெரிய இகாமர்ஸ் நிறுவனங்களுடன் இணைந்துள்ள சிறு வணிகர்கள், உபெர், ஓலா போன்றவற்றில் இணைந்துள்ள ஓட்டுநர்கள் மற்றும் சொமாடோ போன்றவற்றில் இணைந்துள்ள சிறிய உணவகங்கள், அர்பன் கிளாப் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் சிகையலங்கார நிபுணர், தச்சர்கள், எலக்ட்ரீசியன் போன்றர்களை பாதுகாக்கும் வகையில் இகாமர்ஸ் சட்டம் செம்மைப்படுத்தப்பட வேண்டும். இகாமர்ஸ் ஏஜெண்டுகளும், எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல், சுரண்டலுக்கு ஆளாகின்றனர். அதற்கு எதிராகவும் சட்டப்பிரிவு சேர்க்கப்பட வேண்டும். மின் வணிக பரிவர்த்தனைகள், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், தவறான பொருட்கள் விற்பனை, தேடல் வழிமுறை மற்றும் பிற தொழில்நுட்பங்களை ஆய்வு செய்வதற்கும் செயல்படுத்துவதற்கும் பொருத்தமான விதிகளை இதில் சேர்க்கலாம்’ என்பது உள்ளிட்ட பல ஆலோசனைகள் அதில் இடம்பெற்றுள்ளன.

# வசிப்பிட சான்று விதிகளில் திருத்தம்



விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீரில் சட்டப்பிரிவு 370 நீக்கத்திற்குப் பிறகு, அங்கு வாழும் பட்டியலினத்தவர், பிற சிறுபான்மையினர், பெண்கள் என பலரின் உரிமைகளும் மீட்டெடுத்து மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில், ஜம்மு காஷ்மீர பெண்கள் வெளி மாநிலத்தவரை மணந்தால் அவர்களுக்கான சொத்து உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் முன்பு பரிக்கப்பட்டன. தற்போது, அவர்களுக்கு அந்த உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதோடு, அவர்களின் கணவர், குழந்தைகளுக்கும் அங்கு வசிப்பிட சான்று அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது நிர்வாகத் துறை (ஜி.ஏ.டி) ஆணையரும் செயலாளருமான மனோஜ் திவேதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவு’ என குறி இந்த சட்டத் திருத்தத்தை பா.ஜ.க பாராட்டியுள்ளது. முன்னதாக, கடந்த 2019ல் பிரதமர் மோடி, "எங்கள் மற்ற மாநிலங்களில் உள்ள மகள்கள் பெற்றுள்ள உரிமையை, ஜம்முகாஷ்மீரில் உள்ள மகள்கள் இழந்துவிட்டனர்" என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜந்தர் மந்தரில் போராட்டம்



விஜயபாரதம்

மத்திய அரசின் புதிய வேளாண் சட்ட திருத்தங்களுக்கு எதிராக பஞ்சாப், ஹரியானா மாநிலங்களைச் சேர்ந்த விவசாய ஏஜெண்டுகளும் அவர்களது கூலியாட்களும் சில விவசாயிகளுடன் இணைந்து டெல்லி ஹரியானா எல்லையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சமீபத்தில் போராட்டக் களத்தை மாற்ற முடிவு செய்த அவர்கள், டெல்லியில் நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடத்த அவர்கள் அனுமதி கோரினர். இதற்கு காவல்துறை மறுப்பு தெரிவித்தது. இதனையடுத்து டெல்லி ஜந்தர் மந்தருக்கு போராட்டக்களத்தை அவர்கள் மாற்றியுள்ளனர். பி.கே.யு விவசாய சங்கத் தலைவர் திகாயத் தலைமையில் 200க்கும் மேற்பட்டவர்கள் பேருந்துகளில் ஜந்தர் மந்தர் வந்து போராட்டத்தை தொடங்கினர். அங்கு காவலர்கள் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

# சீன ராணுவத்தில் திபெத்தியர்கள்



விஜயபாரதம்

நமது பாரத உளவுத்துறையினரின் அறிக்கைப்படி, சீன ராணுவத்தில் திபெத்திய இளைஞர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டு வருகின்றனர். அவர்களை எல்லை பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த சீனா திட்டமிட்டு உள்ளது. திபெத்தில் உள்ள குடும்பத்திற்கு ஒரு இளைஞர் ராணுவத்தில் சேர வேண்டியது கட்டாயம் ஆக்கப்பட்டு உள்ளது. தற்போது 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ராணுவ அகாடமியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்.ஆர்.எஸ்.ஏ.எம். ஏவுகணைகள்


விஜயபாரதம்

வானத்தில் வரும் எதிரியின் ஏவுகணைகள், விமானங்கள் மற்றும் வானூர்திகளை சூப்பர்சோனிக் வேகத்தில் சென்று தாக்கியழிக்கக் கூடியவை எம்.ஆர்.எஸ்.ஏ.எம் ரக ஏவுகணைகள். நடுத்தர ரக வான் பாதுகாப்பு ஏவுகணையான இதனை நமது பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமான டி.ஆர்.டி.ஓ உடன் இஸ்ரேலின் ஐ.ஏ.ஐ இணைந்து மேம்படுத்தியுள்ளது. 70 கி.மீ தூரம்வரை வரும் இலக்குகளை இந்த ஏவுகணை அமைப்பு சுட்டு வீழ்த்தக்கூடியது. ராணுவம்,கடற்படை, விமானப்படை என முப்படைகளும் இந்த அமைப்பை சில மாற்றங்களுடன் படையில் இணைத்து செயல்படுத்தலாம். பாரத விமானப்படைக்காக தயாரிக்கப்பட்ட இந்த வான்பாதுகாப்பு இந்த ஏவுகணைகளின் முதல் தொகுதி பாரத் டைனமிக் லிமிடெட் நிறுவனத்தில் இருந்து விமானப்படையிடம் ஒப்படைக்க கொண்டு செல்லப்பட்டது.

# கடற்படை கூட்டுப்போர் பயிற்சி


விஜயபாரதம்

இந்தோ - பசிபிக் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதையொட்டி வங்கக் கடலில் பாரத, பிரிட்டன் கடற்படைகள் கூட்டுப் போர்ப் பயிற்சியை நேற்று, இன்று என 2 நாட்களுக்கு நடத்தி வருகின்றன. இந்தக் கூட்டுப் போர் பயிற்சியில் பிரிட்டனின் மிகப் பெரிய போர் கப்பலான ஹெச்.எம்.எஸ் குயின் எலிசபெத் பங்கேற்றுள்ளது. இந்தோபசிபிக் பிராந்தியத்தில் உள்ள சுமார் 40 நாடுகளுடன் தனித்தனியாகக் கூட்டுப் போர் பயிற்சியை பிரிட்டன் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த போர் பயிற்சி பாரதம் உள்ளிட்ட நட்பு நாடுகளுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த உதவும். இது பாதுகாப்பு விவகாரத்தில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்று பிரிட்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து கர்நாடகாவிலுள்ள கார்வார் துறைமுகத்தில் அக்டோபர் 21 முதல் 23 வரை பாரத பிரிட்டன் கடற்படையினர் மீண்டும் போர்ப் பயிற்சியை நடத்தவுள்ளனர். அதைத் தொடர்ந்து கோவாவில் அக்டோபர் 24 முதல் 27 வரை அடுத்த கூட்டுப் போர் பயிற்சி நடைபெறும் என்று பாரத கடற்படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோதிரம் யாருடையது ?



விஜயபாரதம்

ராமனும் சோமனும் நண்பர்கள். ஒரு நாள் ராமன் சோமனிடம் சென்று, "சோமா, நான் ஒரு கல்யாணத்திற்குச் செல்ல வேண்டும். உன்னுடைய தங்க மோதிரத்தை ஒரு நாள் இரவல் கொடுத்தால் கல்யாணத்திற்குப் போய் வந்ததும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றான் ராமன்.

சோமனும் தன் கையிலிருந்த தங்க மோதிரத்தைக் கழற்றி ராமனிடம் கொடுத்தான்.

மோதிரம் வாங்கிச் சென்ற ராமன் வெகுநாளாகியும் திருப்பித்தரவில்லை. சோமன் அவன் வீட்டுக்குச் சென்றான். "என்ன ராமா! தங்க மோதிரம் இரவலாக வாங்கினாயே, இன்னும் திருப்பித் தரவில்லையே!" என்றான்.

"தங்க மோதிரமா? நான் வைத்திருப்பது என்னுடையது. உன்னிடம் இருந்து நான் ஒன்றும் வாங்கவில்லையே!" என்று ஒரு போடு போட்டான் ராமன்.

சோமன் நேராக சென்று மரியாதை ராமனிடம் முறையிட்டான்.

மரியாதை ராமன், அந்த ராமனை அழைத்து விசாரித்தார். ராமனோ "ஐயா சோமன் பொய் சொல்கிறான். நான் இவனிடம் மோதிரம் வாங்கவில்லை. என் விரலில் இருப்பது என் மோதிரம்" என்றான்.

இதைக் கேட்ட மரியாதை ராமன் "நீங்கள் இருவரும் சொல்வதிலிருந்து மோதிரம் யாருக்கு சொந்தம் என்று தெரியவில்லை. நாளை வாருங்கள்" என்று சொல்லி அனுப்பி விட்டார்.

மறுநாள் ஒரு பொற்கொல்லர் சபைக்கு வந்தார். அவரிடம் மோதிரம் கொடுக்கப்பட்டது. அவர் அதை உரைக்கல்லில் நிறுத்தாமல் அதிக நேரம் தேய்த்துக் கொண்டே இருந்தார். இதைப் பார்த்த சோமன் "ஐயா என் மோதிரத்தை இப்படியே தேய்த்து கரைத்து விடுவாய் போலிருக்கிறதே!" என்று கதறினான்.

ராமனோ பேசாமல் இருந்தான். பின்னர் பொற்கொல்லர் மோதிரத்தின் மதிப்பை குறைவாக விலை சொன்னார். அந்த விலையைக் கேட்டதும் சோமன் கோபமுற்றான். "என்ன அநியாயம் இது! நான் வாங்கிய விலையில் கால்பங்குகூட இல்லையே!" என்று கூச்சலிட்டான்.

இதைக்கேட்ட மரியாதை ராமன், ராமனைப் பார்த்து "உண்மையாகவே இது உன்னுடைய மோதிரமாக இருந்தால் இந்நேரம் நீ பேசாமல் இருந்திருக்க மாட்டாய், உண்மையை வரவழைப்பதற்காக நான்தான் இப்படி செய்ய சொன்னேன். இப்போது மோதிரத்திற்கு உரியவர் யார் என்பது தெரிந்துவிட்டது." என்று சொல்லி மோதிரத்தை சோமனிடம் ஒப்படைத்தார்.

சோமனை ஏமாற்றிய குற்றத்திற்காக ராமனுக்கு ஒரு மாதம் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பு கூறினார்.

# வலையில் சிக்கிய மீம்கள்

**முஸ்லீம்களுக்கு தி.க. என்றுமே துணை நிற்கும் - கி.வீரமணி**



ஏனுங்க வீரமணி சார், அப்படியே
சீனா உய்குர் முஸ்லிம்கள்
பங்களாதேஷ் ரோஹிங்யா முஸ்லிம்கள்
தலிபான் கொடுமையை அனுபவிக்கும்
ஆப்கான் முஸ்லிம்கள்
பாகிஸ்தான் கொடுமை படுத்தும்
பலுஸ்ஸி முஸ்லிம்கள்
பக்கத்து சிலோன் முஸ்லிம்களுக்கும்
துணை நிற்பீங்களா? ஆசிரியர் சார்

உடுப்பியில் இரண்டு கோடி மதிப்பில்
விநாயகர் கோவில் கட்டிய 77 வயது
கிறிஸ்தவர் கபிரியேல். தன் வெற்றிக்கு
விநாயகரே காரணம் என்று நெகிழ்ச்சி













# விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

**www.vijayabharatham.org**

என்ற இணையதளம் அல்லது

**044 - 26420870** என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006